Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 77/2018

Deposition of witness for: PW - 9

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தில் குமார் | Father | : வைரவன் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 22.06.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 22day of 06.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

**நான் தற்போது மதுரை, ஒத்தக்கடையில் குடியிருந்துகொண்டு ஒத்தக்கடையில் டீ கடை வைத்துள்ளேன். அசா1 நாச்சம்மா எனது அம்மா. கடந்த 13.01.2013 ம் தேதி நான் சென்னையில் இருந்தேன். 20.01.2013 ம் தேதி எனது அண்ணன் மணிகன்டன் என்னை தொடர்பு கொண்டு 19.01.2013 ம் தேதி எனது அம்மாவை அய்யப்பன் நகரில் உள்ள எங்கள் வீட்டின் அருகே எனது அம்மா எனது அக்கா நிர்மலாவுடன் மதுரைக்கு சென்று வீட்டிற்கு நடந்து கொண்டிருந்தபோது 3 நபர்கள் இரு சக்கர வாகனத்தில் வந்து எனது தாயாரை அடித்து எனது அம்மா அணிந்திருந்த தாலி செயினை அறுத்ததாகவும், அப்போது எனது அம்மா செயினை பிடித்துக்கொண்டதாகவும், 1 பவுன் செயினை அறுத்துக்கொண்டு சென்றுவிட்டதாகவும், மீத 5 பவுனை எனது அம்மா கையில் பிடித்துக்கொண்டதாக எனது அண்ணன் எனக்கு தகவல் சொன்னார். அந்த 3 நபர்களும் இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டதாக சொன்னார்கள். எனது அம்மாவை எனது அண்ணன், அக்காவும், மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்க அழைத்து சென்றுவிட்டார்கள். நான் மறுநாள் வந்து எனது அம்மாவை அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். எனது அம்மாவிற்கு எதிரிகள் கழுத்தில் அணிந்திருந்த நகையை இழுத்ததினால் கீழே விழுந்து**

இடது பக்க கண்ணம், இடது கை, இடது கால் ஆகியவற்றில் சிராய்ப்பு காயம் இருந்தது. எனது அம்மா வழக்கு கொடுத்துள்ளார். 2 மாதம் கழித்து நகை கிடைத்துவிட்டதாக எனது அம்மா என்னிடம் சொன்னார். எனது தாயார் அணிந்திருந்த தாலி செயின் எனக்கு நன்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின்தான் எனது தாயாரின் தாலி செயின். (அந்த தாலி செயினை காட்டும் புகைபடம் மற்றும் குறுந்தகடு அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது ). என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**1 எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை, குவிமுச பிரிவு 311ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் சரிதான். போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து விசாரித்தார்கள். அந்த விசாரணையிலும் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனது அண்ணன் மணிகண்டன் சொல்லிதான் தெரியும், நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் எனது தாயாரின் அறுந்துபோன 1 பவுன் செயினை மட்டும்தான் எதிரிகள் அறுத்து சென்றார்கள் என்றால் சரிதான். என்னிடம் தற்போது காட்டப்படும் புகைப்படத்தில் அறுந்துபோகாத முழு செயின் உள்ளது என்றால் சரிதான்.